**வரையறுத்த இலங்கை அரசாங்க வர்த்தக பொது கூட்டுத்தாபனம் - 2024/2025**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுத்த இலங்கை அரசாங்க வர்த்தக பொது கூட்டுத்தாபனத்தின் (“கம்பனி”) 2025 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்களானது 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையினை பயன்படுத்துதல் கம்பனியை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,436,998,718 தொகையான வணிக கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 181,345,597 ஆனதுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 73,002,772 ஆன சௌம்யமூர்த்தி தொண்டமான் மன்றத்திடமிருந்து அறவிட வேண்டிய மீதி 05 ஆண்டுகளை மிகைத்த | 01 ஆண்டிற்கு மேற்பட்ட கடன்பட்டோர்கள் சம்பந்தமாக கடன்பட்டோர்களிடம் சென்று மற்றும் தொலைபேசி செய்திகள் கடிதங்கள் என்பவற்றின் மூலம் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மிகவும் ஆபத்தான கடன்பட்டோர்களுக்காக அறவிட முடியாகடனுக்கு | வணிக கடன்பட்டோர் மீதி மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மொத்த கடன்பட்டோர் மீதியில் 40 சதவீதம் அளவானதாகும். மேலும் ஏனைய பெறவேண்டியவற்றினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,125,955 ஆன மிதி 03 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வரும் மீதியாகும். இந்த மீதியை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 100% ஒதுக்கீடு செய்தல், கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துவதற்காக ஞாபகப்படுத்தல் கடிதங்களை அனுப்புதல், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், 05 ஆண்டுகளை மிகைத்து அறவிட முடியாத கடன்பட்டோர்களுக்கு செயற்பாட்டு கையேட்டின் 6.9 ஆம் பிரிவிற்கு இணங்க பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் முதலிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றது. | |

### 1.5.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 372,005,293 தொகையான ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் சம்பந்தமாக ஒரு காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அந்த மீதியில் நீண்டகாலமாக மாற்றமின்றி காணப்பட்ட ரூபா 16,171,233 மீதியும் காணப்பட்டது. | கல்வி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீருடைகளை பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக புடவைகளை வெட்டுவதற்காக வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 10,045,847 காட்டப்படுவதுடன் அதற்காக கல்வி அமைச்சிடமிருந்து ரூபா 7,784,037 பணம் கிடைக்க வேண்டி இருந்தது. இது சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்குச் சமர்பித்து எதிர்வரும் காலங்களில் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | PED 1/2015 ஆம் இலக்க 2015 மே 25 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அரசாங்க தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 ஒக்தோபர் 05 ஆந் திகதிய PED/S/STC/03/11(i) ஆம் இலக்க கடிதம் | ஒழுங்குவிதிகளுக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமை இல்லாத 30 உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 2,820,000 மற்றும் ரூபா 60,000 போக்குவரத்து படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்பொழுது காணப்படுகின்ற வாகன அணியானது பாவனையாளர்களைச் சந்தித்தல், சந்தை மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் கேள்வி நடவடிக்கைகள் முதலிய செயற்பாடுகளுக்கு போதியதல்லாததனால் 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆர்வமுள்ள தரப்பினர்களைச் சந்தித்தலுக்கான படிகள் மற்றும் வெளிக்கள படிகளை மீளளிப்புச் செய்வதற்கு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மீளளிப்பு முறைமைக்கு இணங்க போக்குவரத்து செலவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படிகள் செலுத்தும் போது ஊழியர்களுக்கு தகமையுள்ள விடுமுறைகளை கணிக்கும் போது 1954 இன் 19 ஆம் இலக்க சாப்பு மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ஆண்டின் போது பெற்றுக்கொள்ளக்கூடிய | நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து உள்ளக சுற்றறிக்கையின் அடிப்படையில் ஊழியர்களுக்கு ஒரு ஆண்டிற்கு அமைய விடுமுறை 07 நாட்கள் வருடாந்த விடுமுறை 14 நாட்கள் மற்றும் சுகவீன விடுமுறை 21 நாட்களுக்கு தகமையுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் | 1954 இன் 19 ஆம் இலக்க சாப்பு மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தகமையுள்ள விடுமுறைகளை கவனித்து பார்த்து விடுமுறை தின படிகள் வழங்கப்படுதல் வேண்டும். மிகைக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 21 நாட்களுக்குப் பதிலாக 42 நாட்களாகக் கருதி நடவடிக்கை எடுத்து மீளாய்வாண்டில் விடுமுறைகளின் அடிப்படையிலான படிகளாக ரூபா 9,497,982 செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேமிக்கப்பட்ட விடுமுறை நாட்கள் 20 இற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பாதீட்டில் நிருவாகச் செலவுகளின் கீழ் விடுமுறை தினச் சம்பளங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2024 திசெம்பர் 23 ஆந் திகதிய PED 03/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்தி | 2023/2024 நிதி ஆண்டில் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் வரிக்கு பின்னைய இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் திரண்ட நிதியத்திற்கு பங்கிலாபமாக செலுத்தப்படாது அரசாங்க தொழில் முயற்சிகள் இலாபத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஆளணியினருக்கு மிகையூதியம் செலுத்துவதற்கு தகைமை இல்லாதிருந்தும் கம்பனி 2023/2024 ஆம் ஆண்டின் போது உழைத்த இலாபத்தில் 16 சதவீதம் அளவிலான பங்கிலாபத்தினை செலுத்தியிருந்தும் அக்காலப்பகுதி தொடர்பாக 259 ஊழியர்களுக்கு ரூபா 5,180,000 மிகையூதியம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | 02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் 2023/2024 நிதி ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாபத்தில் ஆகக் குறைந்தது 30% இனை திரண்ட நிதியத்திற்கு பங்கிலாபம்/ இறைவரி செலுத்தியிருக்குமாயின் மிகையூதியமாக ரூபா 20,000 செலுத்த முடியும் என்பதனால் 2023/2024 ஆம் ஆண்டில் இறைவரியாக ரூபா 464,260,462 தொகையும் பங்கிலாபமாக ரூபா 102,500,000 தொகையுமாக முழுப் பணம் ரூபா 566,760,462 செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க சுற்றறிக்கை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மிகையூதியம் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் 30 சதவீதம் திரண்ட நிதியத்திற்கு பங்கிலாபம் செலுத்துகையில் மாத்திரம் ஆளணியினருக்கு மிகையூதியம் செலுத்தலாம். சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED 01/2021 ஆம் | திறைசேரியின் அங்கீகாரம் இல்லாது மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக ரூபா 8,815,474 தொகை | வதிவிட சிகிச்சைக்காக ரூபா 25,000 தொகையும் வதிவிடமற்ற சிகிச்சைக்காக ரூபா | அனைத்து படிகளுக்குமாக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வத |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 3.2(i) ஆம் பந்தி | ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | 15,000 தொகையுமான உச்ச எல்லைக்கு உட்பட்டு ஒரு ஆண்டிற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 40,000 ஆக மருத்துவ செலவுப் படிகள் செலுத்தப்படலாம். 2024 பெப்ரவரி மாதத்திலிருந்து அனைத்து சிகிச்சைகளுக்குமாக ஒரு ஆண்டிற்கு உச்ச எல்லை ரூபா 40,000 ஆக செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2024 பெப்ரவரி 28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | ஊழியர் நலன்புரிச் சங்கங்கள் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்காக கம்பனியின் நிதி பயன்படுத்தப்படாதிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 08 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 806,500 தொகை நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் ஒரு வியாபார நிறுவனம் என்பதனால் விற்பனைப் புரள்வினை அதிகரிக்கச் செய்வதற்காக வியாபார பிரசித்தப்படுத்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நலன்புரி நடவடிக்கைகளுக்காக பணம் மாற்றப்படவில்லை. பாதீட்டில் பிரசித்தப்படுத்தல் மற்றும் வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த எல்லைக்குள் வியாபார மேம்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து வகையிலுமான நலன்புரிச் செலவுகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 369,998,877 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,501,214,947 ஆகும். அதற்கிணங்க

நிதி விளைவுகளில் ரூபா 1,131,216,070 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. விற்பனைக் கிரயம் ரூபா 2,274,870,836 ஆல் குறைவடைந்திருந்தும் விற்பனை வருமானம் ரூபா 3,344,949,618 ஆலும் வருமானம் ரூபா 99,390,596 ஆலும் குறைவடைதல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ஊழியர்களின் மாதாந்த மொத்த உழைப்பில் 10 சதவீதம் ஊழியர்களினாலும் 15 சதவீதமான பங்களிப்பு கம்பனியினாலும் மேற்கொள்ளப்பட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன் போது ஆகக் குறைந்த பங்களிப்பான 12 சதவீதத்தினை மிகைத்து 03 சதவீதத்தினை மிகையாகச் செலுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டில் 12 சதவீதத்தினை மிகைத்து செலுத்தப்பட்டுள்ள 03 சதவீதம் ஆன அங்கீகாரமற்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு பணம் ரூபா 4,806,084 ஆகும். | ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கம்பனியால் செலுத்தபடுகின்ற 15% ஆன பங்களிப்பிற்குரிய அங்கீகாரம் சம்பந்தமாக 1996 ஆம் ஆண்டிலிருந்து பணிப்பாளர் சபைப் பத்திரம் பரீட்சிக்கப்பட்ட போதிலும் பணிப்பாளர் சபை தீர்மானத்தினை தேடிக் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. 1984 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஊழியர் ஆட்சேர்ப்பினை பரீட்சித்த போது 15% ஆன பங்களிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் கீழான விகிதத்திற்கு மேற்பட்ட விகிதத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று தொழில் ஆணையாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2025 மே 19 ஆந் திகதிய உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் சுங்கத்தீர்வையற்ற கடைகளின் களஞ்சியங்களில் 2025 மார்ச் 22 ஆந் திகதியில் காணப்பட்ட இருப்புக்களில் ரூபா 1,089,556 தொகையான இருப்புக்கள் பழுதடைந்த இருப்புக்களாகவும் ரூபா 13,884,042 தொகையான இருப்புக்கள் விற்பனை செய்ய முடியாத இருப்புக்களாகவும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய இருப்புக்கள் சம்பந்தமாக முறையான | கணக்காய்வு அவதானிப்புக்களையும் பிரேரணைகளையும் பின்பற்றி எதிர்வரும் ஆண்டுகளின் போது தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். | பழுதடைந்த இருப்புக்கள் மற்றும் விற்பனை செய்யமுடியாத இருப்புக்கள் சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அவ்வாறு இருப்புக்கள் பழுதடைவதற்கான காரணம் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளம் காண்பதற்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கம்பனியினால் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட நாரஹேன்பிட பொருளாதார நிலையத்தின் 07 ஆம் இலக்க களஞ்சிய வளவிற்காக வாடகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 63 மில்லியன் செலவு செய்து களஞ்சிய வளவு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | நாரஹேன்பிடவில் அமைந்துள்ள களஞ்சியத்திற்காக பொருளாதார நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு உடன்படிக்கை செய்து கொள்வதற்காக கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்தும் இன்றுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடம் சம்பந்தமாக முறையான வாடகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அக்கட்டிடம் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மீளளிப்புச் செய்தல் சம்பந்தமாக வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஈ) | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சம்பளம் என்பவற்றை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் தொடர்புபடுத்தப்படாதிருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 202 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட விடுமுறை தினப் படிகளைக் கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படிகளை தொடர்புபடுத்தியதன் காரணமாக ரூபா 3,220,465 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தினை கணிப்பீடு செய்யும் போது மொத்த மாதாந்த உழைப்பு என்பதற்கு சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகள் உள்ளடக்கப்பட்டது என தொழில் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தினை கணிப்பீடு செய்யும் வழிகாட்டிக் கோவையில் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க விடுமுறை தின சம்பளத்தை கணிப்பீடு செய்யும் போது சம்பளம் என்பதற்கு வாழ்க்கைச் செலவுப் படிகள் தொடர்புபடுத்தப்பட்டது. | மேலதிக நேர வேலைப் படிகள் மற்றும் விடுமுறை தினச் சம்பளத்தை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் தொடர்புபடுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் மிகையாகச் செலுத்தியுள்ள பணத்தை அறவீடு செயற்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022/2023 கணக்காண்டின் போது தலங்கம் Q Shop காட்சியறை ரூபா 2,245,320 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்தும் எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | தலங்கம Q Shop விற்பனை நிலையம் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலங்கம டிப்போவில் அமைந்துள்ளதுடன் சபையில் காலத்துக்கு காலம் இடம்பெற்ற முகாமைத்துவ மாற்றங்களின் அடிப்படையில் உடன்படிக்கை நிபந்தனைக ளில் உருவாகிய தெளிவற்ற நிலைமையின் காரணமாக அந்த வளவிலுள்ள Q Shop இன் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதுள்ளது. | இவ்வாறான மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். இதில் வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7.5 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்கள பெறுகைக்குழு வரிசை அமைச்சு செயலாளரினால் பெயரிடப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் திணைக்கள பெறுகை குழு தலைவரினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவிற்கு வரிசை அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளர் அல்லது அதற்குச் சமமான மட்டத்திலுள்ள ஒரு பணிப்பாளர் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகளி-ன் எல்லையின் அடிப்படையில் அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினூடாக முறைப்படியாக பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதனால் நிறு வனத்தின் உள்ளக ஆவணங்களுக்காக தேவையான தீர்மானம் எடுத்தல் திணைக்களன பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழுவினை நியமித்தல் மற்றும் அதன் சேர்மானத்தை தயாரித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் பிரதான குறிக்கோள்களுக்கு மத்தியில் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தைக்குள் நுழையும் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகளை 2024/25 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டிற்கு நேரொத்ததாக மீளாய்வாண்டின் போது 04 பிரிவுகளின் விற்பனை வருமானம் 07 சதவீதத்திலிருந்து 89 சதவீதம் வரையான அளவினால் குறைவடைந்திருந்ததுடன் விசேட செயற்திட்ட பிரிவு 01 சதவீதம் மட்டத்தினை அடைந்திருந்தது. | வெளிநாட்டு இறக்குமதி வியாபாரத்திற்குள் நுழைவதற்காக பொருட்கள் மற்றும் வழங்குனர்களை அடையாளம் காண்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் முழுக் காலத்திற்குமாக ஈடுபடுத்துவதற்கு நிறுவனத்தின் ஆளணியினர் பற்றாக்குறை மற்றும் தற்பொழுது இருக்கின்ற ஆளணியினர் தற்பொழுது காணப்படுகின்ற சந்தை நடவடிக்கைகளுக்கு உச்ச அளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததன் காரணமாக வெற்றியளித்திருக்கவில்லை. தேர்தல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதனால் அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகள் மற்றும் கேள்வி நடைமுறைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுதல் மற்றும் தாமதப்படுத்துதல், சுங்கத்தீர்வையற்ற அனுமதிப்பத்திரத்தை 2025 ஆம் ஆண்டிற்கு மீண்டும் புதுப்பித்தல் தொடர்பாக காணப்பட்ட சிக்கல், வியாபாரத்தில் காணப்பட்ட போட்டித் தன்மை, அரசாங்க நிறுவனங்களில் தீவிரமான செலவு மட்டுப்படுத்தல்கள் காணப்படல் முதலிய விடயங்கள் வருமானம் குறைவடைவதற்கு காரணமாக உள்ளது. | எதிர்பார்த்த குறிக்கோள்களை திட்டங்களில் உள்ளடக்கி நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |